# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 04.01.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 263வது வசனத்தை ஓதினார்கள்:**

அதன் பொருள்: *தங்கள் செல்வத்தை இறைவழியில் செலவிட்டுப் பின்னர் எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும், எவ்விதத்திலும் துன்பத்தைக் கொடுக்காமலும் இருப்போருக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள் (2:263)*

இந்த வசனத்தின் கருத்தை இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இருக்கின்ற புரிந்து கொள்ளும் திறன் வேறு எவருக்கும் இல்லை. இவர்கள் தன்னலம் பாராமல் பொருள் தியாகம் செய்கின்றனர். பொருள் தியாகம் செய்ய விரும்புகின்றனர். தங்கள் விருப்பத்தின்படி தியாகம் செய்ய முடியவில்லை என்றால் அமைதியிழந்து விடுகின்றனர். பழைய அஹ்மதிகளின் நிலையும், புதிய அஹ்மதிகளின் நிலையும் இவ்வாறே உள்ளது. நேற்று என்னை அரபு நாட்டைச் சேர்ந்த ஒரு குடும்பம் சந்தித்தது. கணவன், மனைவி ஆகிய இருவரும் நன்கு படித்தவர்கள் ஆவர். அவர்கள் Ph.D. முடித்திருக்கின்றனர். மாசா அல்லாஹ் அவர்களின் பிள்ளைகளும் நல்லியல்பு கொண்டவர்கள் ஆவர். மார்க்கத்தின் பக்கம் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இளம் வயதை உடையவர்களாகவும், புதிய அஹ்மதிகளாக இருந்தும் கூட ஜமாஅத்துடன் இவர்களுக்கு மிகுதியாக தொடர்பு இருக்கின்றது. அவர்களிடம் அதிக ஆர்வம் உள்ளது. அவர்களின் ஒரு மகன் இப்போது இளமைப் பருவத்தை அடைகின்றான். இருந்தும் மார்க்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவனாக இருக்கின்றான். அவனுக்கு 12, 13 வயதாகின்றது. இந்தக் குடும்பம் கொஞ்ச மாதத்திற்கு முன்பு தான் பைஅத் செய்தது. இன்று பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருக்கும் நிலையில் இவர்களுக்கு வேலையும் கிடைக்கவில்லை. படிப்பையும் இப்போது தான் முடித்திருக்கின்றார்கள். மிகவும் கஷ்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். இன்னும் சொல்வதென்றால், உறவினர்களிடம் கடன் வாங்கி வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். இந்தக் குடும்பத்தில் பிள்ளைகளின் தாய் என்னிடம், வேலை கிடைக்காததால் சந்தாவை முழுமையாக செலுத்த முடியவில்லை. எனவே எனது உள்ளம் அமைதியிழந்து விட்டது என்று கூறினார். உங்களது நிலைமைக்கு ஏற்றவாறு உங்களால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அல்லது கொடுக்கின்றீர்களோ அதுவே போதுமானது என்று கூறி நான் அவர்களுக்கு புரிய வைத்தேன். ஆனால் அந்த பெண், எந்தவொரு தியாகத்திலும் மற்ற அஹ்மதிகளை விட என்னால் பின்தங்கி இருக்க முடியாது என்று மீண்டும் மீண்டும் கூறினார். ஆனால் இவர்களோ சிறிது மாதத்திற்கு முன்பு தான் பைஅத் செய்திருந்தனர். மீண்டும் மீண்டும் நாங்கள் நிம்மதியிழந்து இருக்கின்றோம் என்று கூறினர். பைஅத் செய்ததற்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் ஏற்படுகின்ற புரட்சி இதுவேயாகும். இந்த உணர்வு தோன்றிய பிறகு நன்மையை சொல்லிக் காட்டுதல் என்ற கேள்விக்கே இடமில்லை. நாங்கள் தியாகம் செய்ய முடியவில்லையே! அல்லது நாங்கள் விரும்பிய படி தியாகம் செய்ய முடியவில்லையே! என்ற ஏக்கம் எப்போதும் இருந்து வருகிறது.

சில நேரம் எதாவது காரணத்தினால் ஒருவருக்கு தண்டனை கொடுக்கும் விதமாக அவரிடமிருந்து இனி சந்தா வாங்கக் கூடாது என்று கூறப்பட்டால் இதனால் நிம்மதியிழந்து வேறு ஏதாவது தண்டனை வழங்குங்கள். ஆனால் இந்தத் தண்டனை வேண்டாம் என்று கடிதம் எழுதுகின்றனர். முதலில் அவர்கள் மன்னிப்பு வேண்டுகின்றனர். எந்த குற்றத்திற்காக தண்டனை கொடுக்கப்பட்டதோ அந்த குற்றத்தை போக்க முயற்சி செய்கின்றனர். தம்மை சீர்திருத்த முயற்சி செய்கின்றனர். ஆனால் தண்டனை வழங்கித்தான் ஆக வேண்டும்

என்றால் இறைவனுக்காக சந்தா கொடுப்பதிலிருந்தும் எங்களை விலக்கி வைக்காதீர்கள். இதுவே எங்களது உயிர் மூச்சாகும் என்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய இந்த ஜமாஅத் வியப்பிற்குரியதாக இருக்கின்றது. பொருள் தியாகம் செய்வதில் அவர்களுக்கு வியக்கத்தக்க நிம்மதியும், திருப்தியும் கிடைக்கின்றது. அதிலிருந்தும் அவர்களை தடுக்கின்றபோது அவர்களின் உள்ளம் நிம்மதியிழந்து விடுகின்றது. இன்று பூமியின் மேற்பரப்பில் இத்தகைய உணர்வைக் கொண்ட வேறு எந்த ஜமாஅத்தும் இல்லை. அஹ்மதிய்யத்தின் எதிரிகளில் பலர் வெற்று வாதம் புரிகின்றனர். ஆனால் பல சமயங்களில் இவர்கள் தமது உரைகளில் காதியானிகள் தனது நோக்கத்தை அடைவதற்காக எந்த அளவு செலவு செய்கின்றனர்; அதே சமயம் ஒரு பள்ளிவாசலைக் கட்டுவதற்கோ அல்லது வேறு பணிகளைச் செய்வதற்கோ உங்களுக்கு ஏன் எந்த கவனமும் இல்லை? என்று இந்த அஹ்மதியல்லாத ஆலிம்களும் கூறியுள்ளனர். சில அமைப்புகளும் கூறியுள்ளன. இது பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் மட்டும் தென்படக்கூடிய ஒன்றல்ல. மாறாக ஆப்ரிக்காவிலுள்ள முஸ்லிம் நாடுகளிலும் இவ்வாறு பேசப்படுவதை நம்மால் கேட்க முடிகிறது. பிறகு கொஞ்சம் செலவு செய்தாலும் கூட இந்த பள்ளிவாசலைக் கட்டுவதற்காக அல்லது பொது மக்களின் மேம்பாட்டிற்காக நாங்கள் இவ்வளவு தொகை கொடுத்தோம் என்று சொல்லிக் காட்டுகின்றனர். அவர்கள் சில நேரம் ஏதாவது ஒரு குழுவிற்கு அல்லது ஏதாவது ஒரு அமைப்பிற்கு பணம் கொடுத்தால் நாங்கள் கொடுத்த தொகை சரியாக செலவு செய்யப்படவில்லை. எனவே அதற்கு கணக்குக் காட்டுங்கள் என்று கூறுவதன் காரணமாக சண்டை ஏற்பட்டு விடுகின்றது. அது சரியாக செலவு செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செல்வத்தில் அல்லாஹ் எந்த அளவு பரக்கத்தை வைத்துள்ளானோ அது அவர்களிடம் தென்படவில்லை என்பதும் கூட அல்லாஹ்வின் பேரருளாகும். கடந்த சில நாட்களுக்கு முன் ஜெர்மனியில் ஜாமிஆ அஹ்மதிய்யாவை துவக்கி வைத்த போது அங்குள்ள பாகிஸ்தானிய பத்திரிகை நிருபர் இந்த திட்டத்திற்காக அரசாங்கத்திடமிருந்து ஏதாவது உதவி பெறப்பட்டதா அல்லது வேறு எங்கேயாவது இருந்து உதவி பெறப்பட்டதா என்று கேட்டார். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் உறுப்பினர்களுடைய சந்தாவின் மூலமாக எம்முடைய எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன; இந்த கட்டடமும் ஜமாஅத் சகோதரர்களின் சந்தாவின் மூலமாகவே கட்டப்பட்டுள்ளது என்றேன். ஒரு அரசாங்க நிறுவனம் அல்லது வேறு ஏதாவது நிறுவனம் இந்தக் கட்டிடத்தை கட்டியிருந்தால் இதற்காக இதை விட அதிகமான தொகை செலவு செய்திருக்கும். அல்லாஹ் ஜமாஅத்தின் பணத்தில் பரக்கத்தை வைத்துள்ளான். குறைந்த தொகையில் பெரும் பணிகள் நடந்து விடுகின்றன. எனவே எத்தகு நல்லெண்ணத்துடன் ஜமாஅத் சகோதரர்கள் சந்தா கொடுக்கின்றனறோ அதே அளவு அல்லாஹ் அதில் பரக்கத்தையும் வழங்கி விடுகின்றான்.

இங்கு நான் இன்னொரு விசயத்தையும் சுட்டிக் காட்டி விடுகின்றேன். ஜமாஅத் சகோதரர்கள் சந்தா கொடுத்து விட்டதன் பின்னர் அதைப் பற்றி கேட்டுபதுமில்லை. அதை சொல்லிக் காட்டுவதும் இல்லை. ஆனால் ஜமாஅத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் சந்தா பணத்தை செலவு செய்யும் போது மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். பார்த்து பார்த்து செலவு செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களின் விளைவாகவே இந்த விரிவான நிலையை நாம் பார்க்கின்றோம். நமது பணத்தில் ஏற்படுகின்ற பரக்கத்துகளை நாம் பார்த்துக் கொண்டே இருப்போம் இன்சா அல்லாஹ். பைசா நம்மிடம் வருவதைப் பொருத்தவரையில் எனக்கு எந்த கவலையும் இல்லை. ஆனால் இதை செலவு செய்பவர்களின் உள்ளம் உலக இச்சையில் மூழ்கி விடக்கூடாதே; ஜமாஅத் செல்வங்களைப் பற்றி கவலைப்படாமல் இருந்து விடக்கூடாதே என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவலையையும் நாம் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் செல்வங்களைச் செலவு செய்வதற்கென்று ஒரு வழிமுறை இருக்கின்றது. பல இடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றது. ஆனால் அவ்வாறு இருந்தும் செலவு செய்பவர்கள் தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்ய வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் உதவியைப் பெற வேண்டும். ஜமாஅத் வளர்ச்சியடைந்து அதன் செல்வங்களில் விரிவான நிலை ஏற்படும்போது எங்கு எதிரிகள் தங்களது முயற்சிகளைச் செய்வதில் வேகமாக செயல்படுகின்றனரோ அங்கு நயவஞ்சகர்கள் மூலம்

ஜமாஅத்தில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சியும் செய்கின்றனர். இவர்களது இந்த முயற்சி எந்த விளைவும் இல்லாமல் ஆனாலும் நாம் எப்போதும் மிகுந்த எச்சரிக்கையுடன் துஆ மற்றும் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் அருள் ஒவ்வொரு நொடிப் பொழுதும் இருக்கின்றது. அவனுடைய உதவியின் காட்சிகளை, அவனுடன் உள்ள தொடர்பை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் வரை எப்போதும் நாம் பார்த்து வருவோம். இந்தப் பணி எவ்வாறு நிறைவடையும் என்று ஒருபோதும் கவலை ஏற்பட்டதில்லை. அல்லாஹ் எப்போதும் அதற்கான ஏற்பாட்டை தானே செய்து விடுகின்றான். அல்லாஹ் எவ்வாறு அஹ்மதிகளின் உள்ளத்தில் இதைப் போடுகின்றான்! அதன் காரணமாக அவர்கள் எந்த அளவு ஆர்வத்துடன் செலவு செய்கின்றனர் என்பதும் வியப்பிற்குரியதாகும்.

இறைவனுக்காக பொருள் தியாகம் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அஹ்மதிகள் தனது வயிற்றை காய வைப்பதை பொறுத்துக் கொள்கின்றனர். ஆனால் சந்தா கொடுக்க மறுப்பு தெரிவிப்பதையோ அல்லது அதை குறைப்பதையோ பொறுத்துக் கொள்வதில்லை. இதுவே நபிமார்களது ஜமாஅத்தின் அடையாளமாகும். அவர்கள் எல்லா விதமான தியாகங்களுக்கும் தயாராக இருக்கின்றனர். பிறகு நாங்கள் எதையுமே செய்யவில்லை என்றும் கூறுகின்றனர். அவர்களிடமிருந்து சந்தா வசூல் செய்வதை அவர்கள் ஜமாஅத்தின் கருணை என்றும், இறைவனின் அருள் என்றும் மதிக்கின்றனர். அவர்களிடமிருந்து சந்தா வாங்குவதற்கு தடை விதிக்கப்படும் போது அத்தண்டனையை திரும்பப் பெறுமாறு வேண்டுகின்றனர். எங்களிடமிருந்து சந்தா வாங்கினால் அது ஜமாஅத் எங்கள் மீது செய்யும் அருளாகும் என்கின்றனர். ஜமாஅத் அமைப்பைப் புரிந்து கொண்ட புதிதாக இணைந்து கொண்ட மக்களுக்கு நல்ல முறையில் தர்பிய்யத் கிடைத்ததன் விளைவாக பொருள் தியாகத்தில் முன்னேற அவர்கள் முயற்சி செய்கின்றனர். சில சமயங்களில் விருப்பச் சந்தாவிற்கான இலக்கு ஜமாஅத்துகளுக்கென்று நிர்ணயம் செய்யப்படுகிறது. அது நிறைவடையாமல் சிறிது குறைவாக இருந்தால் அதை நாங்கள் பூர்த்தி செய்து விடுவோம் என்று செல்வந்தர்கள் கூறுகின்றனர். அவர்களுடைய உள்ளதிலிருந்து இந்த ஓசை எழுகின்றது. எவ்வித வற்புறுத்தலும் இருப்பதில்லை. இந்தக் குறைவை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது அவர்களின் உளப்பூர்வமான ஆசையாக இருக்கிறது. அவர்கள் கட்டாயப் படுத்தப்படுவதில்லை. இவற்றையெல்லாம் அவர்கள் ஏன் செய்கின்றனர். லா கவ்ஃபுன் அலைஹிம் வலா ஹும் யஹ்ஸனூன். அவர்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள் என்ற இறையறிவிப்பை அவர்கள் கேட்கின்றனர். அவர்களுக்கு மறுமை வாழ்க்கை தொடர்பான சிந்தனையும் கவலையும் ஏற்பட்டு விடுகின்றது. அதற்காக அவர்கள் தியாகம் செய்கின்றனர். அவர்களது செயல் இவ்வாறாகும் போது அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகள் கிடைக்கின்றன. அவர்கள் தங்களது மகத்தான எதிர்காலத்தை உருவாக்குகின்றனர். அதன் இறுதி எல்லை அவர்கள் இவ்வுலகை பிரிந்து சென்ற பிறகு அவர்களுக்குத் தெரிய வரும். அல்லாஹ் இறந்த பிறகு கிடைக்கும் மறுமை வாழ்வை பற்றி மட்டும் பேசவில்லை. மாறாக இவ்வுலகிலும் அவன் யாருக்கும் கடன் வைப்பதில்லை. இவ்வுலகிலும் மகத்தான நற்கூலியை அவர்களுக்காக வழங்குகின்றான்.

**ஒரு ஹதீஸே குத்ஸியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.**

அல்லாஹ் கூறுகின்றான். ஆதமின் மகனே! நீ செலவு செய்து கொண்டே இரு. நான் உனக்கு வழங்கிக் கொண்டே இருப்பேன். அல்லாஹ்வின் கொடை எல்லோருக்கும் பொதுவாக கிடைக்கிறது. ஆனால் எவர்கள் அவனது மார்க்கத்திற்காக செலவு செய்கின்றனரோ அவர்களுக்கு எண்ணற்ற அருட்கொடைகள் கிடைக்கின்றன. எனவே அல்லாஹ் ஒருபோதும் கடன் வைப்பதில்லை. ஆனால் நல்லெண்ணத்துடன் அவனது திருப்தி கிடைக்க வேண்டும் என்பதற்காக செலவு செய்ய வேண்டும் என்பதே நிபந்தனையாகும். உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள அஹ்மதிகளின் உள்ளத்தில் தியாகம் செய்ய வேண்டும் என்ற உணர்வை அல்லாஹ் வழங்கியுள்ளான். பிறகு ஒவ்வொருவருக்கும் தத்தமது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் வளர்ச்சியடைவதற்காக இந்த தியாகங்களுக்குப் பிறகு அதிகமாக வழங்கவும் செய்கின்றான். புதிதாக

உருவாகின்ற ஒரு ஜமாஅத்தின் தியாகத்தின் சம்பவத்தை கேளுங்கள். இது ஆப்ரிக்காவிலுள்ள தொலை தூர பகுதியிலுள்ள ஒரு ஜமாஅத்தாகும். இந்த சம்பவத்தில் பொருள் தியாகம் பற்றி மட்டுமின்றி கிலாஃபத்துடனுள்ள தொடர்பு பற்றியும் தெரிய வருகிறது. நைஜர் ஆப்ரிக்காவில் தொலை தூரத்திலுள்ள ஒரு பகுதியாகும். அங்குள்ள முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். இந்த வருட ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளில் முபல்லிக்களுக்கு நடைபெற்ற கூட்டத்தில் ஆப்ரிக்காவிலுள்ள முபல்லிக்களிடம் ஆப்ரிக்காவில் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை உயர்த்த இன்னும் வாய்ப்புள்ளது. எனவே எண்ணிக்கையை அதிகப்படுத்துங்கள் என்று நான் கூறினேன். இதன் படி அவர்கள் அங்கு சென்று பேசிய போது தங்களது பகுதியிலிருந்த பெர்மிகோனி என்ற ஜமாஅத்திற்கு காலத்தின் கலீஃபா இந்த தூதுச் செய்தியை உங்களுக்கு வழங்கியுள்ளார் என்று கூறியதும் அவர்கள் உடனடியாக எனது குரலுக்கு செவி சாய்த்தவாறு சந்தாவை அதிகப்படுத்தினர். இதற்கு முன்னர் பங்கு பெறாதவர்களும் பங்கு பெற வேண்டும் என்று கூறியதும் அவர்களிடம் நல்ல விளைவு ஏற்பட்டது. உங்களது குரலுக்கு செவிசாய்த்தவாறு பெர்மிகோனிலுள்ள கிராமப்புற ஜமாஅத்துகள் தங்களிடம் ரொக்கத் தொகை இல்லாவிட்டாலும் கூட தானியங்களை சந்தாவாக வழங்கினர். எங்கு கடந்த வருடம் 16 மூடை தானியங்கள் வழங்கினறோ அங்கு இவ்வருடம் கிராமத்தை சார்ந்தவர்கள் மொத்தமே ஏறக்குறைய 100 நபர்களே இருந்தும் கூட 52 தானிய மூட்டைகளை சந்தாவாக வழங்கியுள்ளனர். இதை தவிர ரொக்கமாக வழங்கியவர்கள் கூட கடந்த வருடத்தை விட இரு மடங்காக தமது சந்தாவை செலுத்தியுள்ளனர்.

பிறகு நயிஜரின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். கடான் பராவு என்ற கிராமத்திலிந்து சந்தாவிற்கான தானிய மூட்டைகளை கொண்டு செல்லுங்கள் என்று செய்தி வந்தது. நாங்கள் அவற்றை ஏற்றிக் கொண்டு வண்டியில் திரும்பி வந்த சமயத்தில் இரவு 10 மணியாக இருந்தது. நாங்கள் ஒரு அஹ்மதி கிராமமான டப்காவாவை கடந்த போது சில குத்தாம்கள் எங்களை எதிர் பார்த்துக் கொண்டு காத்திருப்பதை பார்த்தோம். அவர்கள் வழியில் கை காட்டி எங்களை நிறுத்தினர். அப்போது இரவு 10 மணியாக இருந்தது. நாங்கள் லஜ்னா தலைவியின் கட்டளைக்கேற்ப மாலையிலிருந்தே இங்கு காத்திருக்கின்றோம். அவர்கள் சந்தாவிற்காக ஒன்று சேர்த்திருந்த தானியங்கள் போன்றவற்றை லஜ்னா தரப்பிலிருந்தும் தனியாக தர விரும்புகின்றனர் என்று கூறுகின்றனர் என்று கூறினார்கள். லஜ்னா தன் தரப்பிலிருந்து தனியாக தானியங்களை ஒன்று சேர்த்தனர். அதைத் தான் அந்த குத்தாம்கள் வழங்குவதற்காக அங்கு நின்றனர். ஒரு மிக சிறிய ஜமாஅத் இத்தகைய உழைப்பையும் பற்றையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர்.

**பிறகு பெனினிலிருந்து அலாடா மண்டலத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்:**

சோயோ என்ற கிராமத்திலுள்ள ஜமாஅத்தின் தலைவர் ஒரு வருடத்திற்கு முன்னர் இணை வைப்பவர்களிலிருந்தும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவராவார். இதற்கு முன் சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தவர் அஹ்மதியாகி ஓரிறைவனின் முன்னால் தலை குனிபவராக ஆகி விட்டார். அவரிடம் வக்ஃபே ஜதீத் சந்தாவை வாங்குவதற்காக சென்ற போது தன்னிடம் இருந்த 450 ஃபிராங்க்ஸிஃபா சந்தாவாக கொடுத்து விட்டார். இன்று மதியம் என்ன சாப்பிடுவோம் என்பதை கூட அவர் சிந்திக்கவில்லை. வீட்டில் வேறு பணம் ஏதும் கிடையாது. மோட்டார் சைக்கிள் ரிக்-ா ஓட்டுபவர் ஆவார். சந்தா கொடுத்த பிறகு அவர் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு இறைவன் ஏதாவது தருவான் என்று எண்ணி வெளியே சென்று விட்டார். மதியம் இல்லாவிட்டால் இரவு சாப்பிட்டுக் கொள்ளலாம். இதனால் என்ன ஆகிவிடப் போகிறது என்று எண்ணினார். மோட்டர் சைக்கிளில் பெட்ரோலையும் கூட கடன் வாங்கித் தான் போட்டிருந்தார். அடுத்த நாள் மேலும் ஓராயிரம் ஃபிராங்க்ஸிஃபா சந்தா கொண்டு வந்தார். முரப்பி சாஹிப் பாருங்கள்! நான் மதிய உணவு பற்றிக் கூட சிந்திக்கவில்லை. மோட்டர் சைக்கிள் ரிக்சாவில் பெட்ரோலையும் கூட கடன் வாங்கித் தான் போட்டிருந்தேன். ஆனால் இறைவன் எனக்கு அதிக சவாரிகளை வழங்கினான். வெறும் கையுடன் போன நான் இரண்டாயிரம் ஃபிராங்க்ஸிஃபா உடன் திரும்பியுள்ளேன். அதிலிருந்து பாதி தொகை ஆயிரம் ஃபிராங்க்ஸிஃபா மேலும்

அதிகப்படியான சந்தாவாக தருகிறேன். அவர் கடனைத் திருப்பிக் கொடுத்த பிறகு அவரிடம் இந்த தொகை மிச்சம் இருந்தது.

**அமீர் சாஹிப் புர்கினோஃபாஸோ அவர்கள் எழுதுகிறார்கள்:**

போபோ மண்டலத்தைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதியான கம்போரே ஸயீத் சாஹிப் கூறுகிறார்கள். பொருளாதார சிக்கலின் காரணமாக அவர்கள் மூன்று மாத சந்தாவை செலுத்தாமல் இருந்தார். இக்காலகட்டத்தில் அவர்களது பொருள்கள் திருடு போயின. அவர்களுடைய வாலிப வயதுடைய ஒரு மகன் கடும் நோய்வாய்ப்பட்டார். எல்லா விதமான சிகிச்சை அளிக்கப்பட்ட பிறகும் கூட ஆரோக்கியம் கிடைக்கவில்லை. அவர் கூறுகின்றார். ஒரு நாள் இரவு கனவில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைப் பார்த்தேன். அதாவது அவர்கள் என்னைப் பார்த்தார்கள். அவர்கள் வந்து இந்த எளியவனிடம் நீங்கள் பல மாதங்களாக சந்தா செலுத்தாமல் இருக்கின்றீர்களே! என்றார்கள். அதற்கு நான் இன்-்ா அல்லாஹ் 20 நாட்களுக்குள் சந்தா செலுத்தி விடுவேன் என்றேன். அவ்வாறே முயற்சி செய்து 20 நாட்களுக்கு சந்தாவையும் செலுத்தி விட்டார்.

அவர் கூறுகிறார்: அன்று முதல் என்னுடைய மகனுக்கு நோய் குணமானது மட்டுமல்லாமல் நல்ல வேலையும் கிடைத்தது. புதிய மோட்டர் சைக்கிள் வாங்குவதற்கு எனக்கு தவ்ஃபீக்கும் வழங்கினான். இவ்வனைத்தும் காலத்தின் கலீஃபா கவனமூட்டியதால் நான் செய்த தியாகத்தின் விளைவாக எனக்கு கிடைத்ததாகும். அல்லாஹ் இவ்வாறு புதிய அஹ்மதிகளின் ஈமானையும் வலுவடையச் செய்கிறான்.

**புர்கினோஃபாஸோவின் மண்டலமான வித்கு -வின் முபல்லிக் சாஹிப் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

இந்த மண்டலத்தின் ரோக்கி படாலா என்ற கிராமத்தின் ஜமாஅத் தலைவர் ஜாலு சீதா சாஹிப் எழுதுகிறார். அவர்கள் விவசாயிகள் ஆவார்கள். அஹ்மதிய்யத்தில் இணைவதற்கு முன்பாகவே அவர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். ஆனால் அஹ்மதிய்யத்தில் சேர்ந்த பிறகு கிடைக்கின்ற மககூலைப் போன்று இதுவரை கிடைத்ததில்லை. இதற்கு ஒரே ஒரு காரணம் தான் உள்ளது. அது சந்தாவாகும் என்று கூறுகிறார். நாங்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து சந்தா செலுத்த ஆரம்பித்ததில் இருந்து எங்களுடைய நிலையே மாறி விட்டது. சந்தா கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து இன்றைய நாள் வரை நான் காணாத அளவிற்கு அதிக பரக்கத்தை எங்களுடைய விவசாயத்தில் நாங்கள் காண்கின்றோம். அவர்கள் கூறுகின்றார்கள். தொடக்கத்தில் அவர்கள் 1 அல்லது 2 மூடை தானியம் தான் சந்தாவாக கொடுத்து வந்தார்கள். இந்த வருடம் 7 மூடை தானியம் சந்தா கொடுத்துள்ளார்கள். இந்த அளவிற்கு பரக்கத் ஏற்பட்டுள்ளது என்று கூறுகின்றார்கள். இவர்கள் ஏழைகளுக்கு பணத்தை கொடுத்து அஹ்மதியாக்குகின்றனர் என்று மவ்லவிகள் கூறுகின்றனர். ஜமாஅத் இவர்களுக்கு என்ன பைசா வழங்குவது. இவர்களுடைய நிலையைப் பாருங்கள். இவர்கள் சுயமாக தியாகம் செய்து தம்முடைய சந்தாவை அதிகரிக்கின்றனர்.

**மாலியின் அமீர் சாஹிப் கூறுகின்றார்:**

நம்முடைய ஒரு முஅல்லிம் அப்துல் காதிர் சாஹிப் கூறினார். சொனிதிக்லா என்ற இடத்தில் அஹ்மதி ஆண்களும் பெண்களும் தனித்தனியாக சந்தா கொடுப்பதற்காகவே தனியாக வயல் வைத்திருக்கின்றனர். தம்முடைய வயலைத் தவிர ஆண்களும் பெண்களும் தனியாக சந்தா கொடுப்பதற்கென்று தனியாக வயல் வளர்க்கின்றனர். இதிலிருந்து எனக்கு கிடைக்கும் வருமானத்தை முழுவதுமாக ஜமாஅத்திற்கு கொடுக்க வேண்டும் என்று வைத்துள்ளனர். அறுவடையின் போது சந்தா வாங்குவதற்காக அங்கு சென்ற போது ஆண்களும் பெண்களும் தனித்தனியாக தங்களது சந்தாவை செலுத்தினர். மூடையை எண்ணிய போது ஆண்களின் சந்தா பெண்களை விட அதிகமாக இருந்தது. அப்போது பெண்கள் சற்று நில்லுங்கள். இப்போது நீங்கள் போய் விட வேண்டாம் என்று கூறி விட்டு வீட்டிற்கு போய் இன்னும் இரண்டு மூடைகளை கொண்டு

வந்து கொடுத்தனர். இறுதியில் ஆண்களை விட பெண்கள் ஒன்றறை மூடை அதிகமாக வழங்கியிருந்தனர். ஆண்களுக்கு ஒன்றறை அல்லது இரண்டறை மூடை அதிகமாக இருந்தது. அவர்கள் எந்த சூழ்நிலையிலும் ஆண்களை விட தாம் பின்தங்கியிருக்க மாட்டோம் என்றனர். இவ்வாறு அவர்கள் ஆண்களை விட ஒன்றறை மூடை அல்லது அரை மூடை அதிகமாக வழங்கியிருந்தனர்.

**மாலி உடைய அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:**

செய்யது உத்ரா ஓடே சாஹிப் 6,7 மாதங்களுக்கு முன்னர் பைஅத் செய்த புதிய அஹ்மதியாவர். அத்துடன் 10,000 பிராங்க்ஸிஃபா சந்தா கொடுத்தார். நமது முஅல்லிம் மீண்டும் அங்கு சென்ற போது பைஅத் செய்வதற்கும் சந்தா கொடுப்பதற்கும் முன்னர் அவரும், அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளும் பெறும்பாலும் உடல் நலம் சரியில்லாமல் இருந்தார்கள். மருந்துக்காக எங்களுக்கு அதிகமாக செலவாகியது. ஆனால் நான் சந்தா கொடுக்க ஆரம்பத்தித்ததிலிருந்தே நானும் என்னுடைய மனைவி குழந்கைளும் ஆரோக்கியமாக இருக்கிறோம். மேலும் மிகக் குறைவாகவே அவர்கள் நோய்வாய்ப் படுகின்றனர். மருந்தக்கான செலவும் மிகவும் குறைந்து விட்டது. இவ்வனைத்தும் சந்தாவின் பரக்கத்தாகும் என்று கூறுகிறார்.

**உகான்டாவின் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

உகான்டாவில் சந்தா கொடுக்கும் விசயத்தில் ஜமாஅத் மக்கள் மிகவும் அதிகமாக முன்னேறி வருகின்றனர். நம்முடைய ஒரு வசதி படைத்த நண்பர் சுலைமான் மகாபி சாஹிப் அம்பாலாவை சார்ந்தவராவார். அவர் தியாகம் செய்வதிலும் சந்தா கொடுப்பதிலும் முன்னனியில் உள்ளார்.இவர் புதிதாக பைஅத் செய்தவர்கள் உள்ள பகுதியில் இரண்டு பள்ளிவாசல் கட்டுவதற்கும் மேலும் ஒரு பகுதியில் பள்ளிக்கூடத்தின் முழுமையான கட்டிடத்தை கட்டுவதற்கும் 50 மில்லியன் ஷில்லிங் தொகையை தியாகம் செய்துள்ளார். முதலில் இவரிடம் ஒரு பள்ளிவாசலை கட்டும்படி கூறப்பட்டிருந்தது. இவரே கூறுகின்றார். நான் பொருள் தியாகம் செய்ய ஆரம்பித்ததிலிருந்து எனக்கு இறைவன் எங்கிருந்து எப்படி வழங்குகின்றான் என்றே புரியவில்லை என்று கூறுகின்றார்.

**கேம்பியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஒரு நண்பரான அல்ஹாஜ் அப்துல்லாஹ் வலோஜோ சாஹிப் அவர்கள் முதலிலேயே வக்ஃபே ஜதீத் சந்தா கொடுத்திருந்தார்கள். இரண்டாவது முறையாக அவரிடம் கூறப்பட்ட போது முன்பு கொடுத்ததை விட அதிகமாக வழங்கினார். அவர் இரு முறை சந்தா கொடுத்துள்ளார் என்று அவரிடம் கூறப்பட்ட போது அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் இது காலத்தின் கலீஃபாவின் அருளுக்குரிய திட்டமாகும். இத்திட்டத்திற்காக எவ்வளவு கொடுத்தாலும் அது குறைவேயாகும் என்று கூறினார்.

**லியோ மண்டலத்தில் உள்ள பொர்கினோ ஃபாசுவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்:**

2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி பகோங்கா ஆதம் என்ற பெரியவர் ஒருவர் அதிகாலையில் மிசன் ஹவுஸுக்கு வந்திருந்தார். அவர், நாள்தோறும் முறையாக நான் ரேடியோ அஹ்மதிய்யாவை கேட்கின்றேன். வீட்டில் இந்த ஒரு ஸ்டேசன் தான் ஆன் செய்து வைக்கப்பட்டிருக்கும். எந்த அளவு இந்த ரேடியோ இஸ்லாத்திற்கு தொண்டு செய்கின்றதோ அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நன்றி தெரிவிக்கும் முகமாக வேறு எதுவும் என்னால் செய்ய முடியாமல் விட்டாலும் ஒரு சிறிய தொகையை வழங்கி இந்த ரேடியோவிற்கு தொண்டு செய்ய விரும்புகின்றேன். இந்த பெரியவர் ஒரு லட்சம் பிரான்க் சிஃபாவை இதற்காக சந்தாவாக வழங்கினார். குறிப்பாக வயலில் வேலை செய்பவர்களுக்கு இது மிகவும் கடினமான விசயமாகும். இந்த பெரியவருக்கு ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு பற்றி புரிய வைக்கப்பட்டது. பிறகு அவர் கொடுத்த சந்தாவிற்கான ரசீது வழங்கப்பட்டது. இந்த நபர் அஹ்மதி அல்ல. அஹ்மதியல்லாதவர்களின் மீதும் இத்தகு தாக்கம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் இஸ்லாத்தை தப்லீக் செய்வதால் நான் இந்த தொகையை வழங்குகின்றேன் என்று இவர் கூறினார். இவருக்கு சந்தா அமைப்பு பற்றி புரிய

வைத்து சந்தா செலுத்தியதற்கான ரசீது கொடுக்கப்பட்டதும் அஹ்மதிய்யத்தின் உண்மை என் உள்ளத்தை சூழ்ந்து விட்டது. நான் அல்லாஹ்வின் வழியில் பல சந்தாக்களை கொடுத்து உள்ளேன். ஆனால் சந்தா தொடர்பான இத்தகைய தூய அமைப்பை அஹ்மதிய்யத் தவிர வேறு எங்கும் என்னால் பார்க்க முடியவில்லை என்று அவர் கூறினார்.

**பெனினின் உள்ளூர் முஅல்லிம் ஸகரிய்யா ராயிமி சாஹிப் கூறுகின்றார்:**

எக்போ என்ற கிராமத்தைச் சார்ந்த கரேபா இப்ராஹீம் சாஹிப் அவர்களின் மனைவியை, கருத்து வேறுபாடு காரணமாக அம்மனைவியின் வீட்டார் தங்களோடு அழைத்துச் சென்று விட்டனர். அப்போது அவர்கள் கருவுற்றிருந்தார்கள். இங்கு வந்ததன் பின்னர் அவர்களுக்கு குழந்தை பிறந்தது. கரோபா இப்ராஹீம் சாஹிப் அவர்கள் தமக்கு பிறந்த ஆண் குழந்தையை திரும்ப எடுத்து செல்வதற்காக மனைவி வீட்டிற்கு வந்தார். குழந்தையை பெற மிகவும் முயற்சி செய்தார். பல வருடங்களாக வழக்கும் நடந்து வந்தது. ஆனால் தோல்வியைத் தவிர எதுவும் அவருக்கு கிடைக்கவில்லை. இவர் ஐந்து வருடங்களுக்கு முன்னால் அஹ்மதியானார். இதற்கு முன் அவர் தனது நிலையைப் பற்றி எவரிடமும் கூறியதில்லை. ஆனால் இந்த வருடம் வழக்கில் தோல்வியடைந்த பிறகு முஅல்லிம் சாஹிபிடம் தமது முழு கதையையும் கூறினார். துஆவிற்காகவும் வேண்டினார். அந்த சமயம் வக்ஃபே ஜதீத் சந்தா வசூலிக்கப்பட்டு வந்த நேரமாக இருந்தது. முஅல்லிம் சாஹிப் அவர்கள் இறைவழியில் செலவு செய்வதன் மூலம் நமது பிரச்சனைகள் தீர்ந்து விடும் என்பது எங்களது ஈமானாகும். நீங்கள் முதலிலேயே அஹ்மதியாகி விட்டீர்கள். ஆனால் சந்தாவின் பக்கம் உங்களுக்கு கவனமில்லாமல் இருக்கின்றது. இப்போதாவது சந்தா கொடுங்கள். இதன் மூலமாக அல்லாஹ் துன்பங்களை அகற்றி விடுவான் என்று கூறினார். கரேபா சாஹிப் அவர்கள் 2000 பிராங் சிஃபாவை வக்ஃபே ஜதீத் சந்தாவாக வழங்கினார். மூன்று நாட்களுக்கு முன்னர் இவரது போன் வந்தது. அதில் அல்லாஹ் எனக்கு சந்தாவின் பரக்கத்தை காட்டி விட்டான். இறைவன் எனக்கு எனது குழந்தையையும் எனக்கு திரும்பத் தந்து விட்டான். எனது மாமா, தாமே அக்குழந்தையை என்னிடம் விட்டுச் செல்ல வந்தார். உனது குழந்தையை நீயே கவனித்துக் கொள் என்று கூறினார். ஆனால் இதற்காக அவர் எந்தக் கூலியையும் கேட்கவில்லை. ஆனால் இதற்கு முன்பு நான் இந்த குழந்தைக்கான எல்லா செலவுகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தும் கூட குழந்தையை அவர்கள் என்னிடம் தரவில்லை என்று கூறினார்.

தன்ஸானியாவிலுந்து ஹஸன் தவ்ஃபீக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். இதற்கு முன்னர் அவர் மிகக் குறைவான தொகையை சந்தாவாக செலுத்தி வந்தார். ஜமாஅத்தின் முபல்லிக் இவருக்கு கவனமூட்டினார். முபல்லிக் சாஹிப் அவர்களை வீட்டிற்கு விருந்துக்காக அழைத்தார். அவர் சந்தாவின் முக்கியத்துவம் மற்றும் அதன் அருள்கள் தொடர்பாக விரிவாக அவருக்கு புரிய வைத்தார். அல்லாஹ் அவர் மீது அருள் செய்தான். இப்போது அவர் முறையாக சந்தா செலுத்த ஆரம்பித்து விட்டார். பிறகு அதை அதிகமாக்கியும் கொடுத்தார்.

இவர் கூறுகின்றார்: இதற்கு முன்னர் எனக்கு எந்த சொத்தும் இருக்கவில்லை. இப்போது நான் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் அமைப்பில் இணைந்துள்ளேன். இறைவன் அருளால் கடந்த சில வருடங்களில் சன் பிளவர் ஆயிலை எடுப்பதற்கான ஒரு சிறிய தொழிற்சாலையையும் கட்டியுள்ளேன். எனது வீட்டையும் கட்டியுள்ளேன். டொடோமோ என்ற நகரத்தில் மூன்று பிளாட்டுகளையும் வாங்கியுள்ளேன். எங்களது குடும்பத்தில் தேவையுடைய மாணவர்களுக்கு தொடர்ந்து பொருளுதவி செய்து வருகிறேன். நானும் எனது செலவில் Ph.D. படித்து வருகிறேன். இவையெல்லாம் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளாகும். மேலும் சந்தாக்களின் பரக்கத்தாகும்.

இந்தியாவின் கோழிக்கோடு ஜமாஅத்தின் ஒரு சகோதரரின் சந்தா அல்லாஹ்வின் அருளால் 2 லட்சத்தி ஆயிரம் ரூபாயாகும். இவர் தன்னுடைய எல்லா சந்தாக்களையும் தமது சக்திக்கு மீறி செலுத்தி வருகிறார்.

அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்தவாறு நான் சந்தாக்களில் மிக அதிகமாக பங்கெடுப்பேன். இதனால் அல்லாஹ் தஆலா எனது வியாபாரத்தில் அதிக பரக்கத்தை வழங்குவான். என்னுடைய வியாபாரம் பெருகிவிடும் என்கிறார். நிதியாண்டின் இறுதியில் வக்ஃபே ஜதீதின் இன்ஸ்பெக்டர் இவரிடம் சந்தா வாங்க சென்ற போது என்னுடைய கணக்கில் பணம் இல்லை. குறிப்பாக துஆ செய்யுங்கள் என்றார். நிதியாண்டு முடிவடைவதற்கு சில மாதங்களே பாக்கியுள்ளன. அவர் செக் எழுதி கொடுத்தார். அல்லாஹ் அருள் செய்தான். வருடத்தின் முடிவில் அவருக்கு வருமானம் கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் சந்தாவின் தொகையையும் அவர் செலுத்தி விட்டார்.

இந்தியாவின் கருளாய் ஜமாஅத்தைச் சேர்ந்த ரஹ்மான் சாஹிப் அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்துள்ளார்.

சந்தா இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறுகிறார்: இவர் ஒவ்வொரு சந்தாவுக்காகவும் தனித்தனியாக டப்பாக்கள் வைத்துள்ளார். எனக்கு முன்னால் ஒரு டப்பாவை திறந்தார். பிறகு தன்னுடைய மனைவியிடம் உங்களுடைய பர்ஸை எடுங்கள் என்று கூறி சந்தாவின் வாக்குறுதியை முழுமைப்படுத்தியது மட்டுமல்லாமல் 1 லட்சத்தி 75 ஆயிரம் ரூபாயை அதிகப்படியாக சந்தா செலுத்தினார். அல்லாஹ்வின் அருளால் இதுவரை அவர் 7 லட்சத்தி 80 ஆயிரம் ரூபாய் வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்தியுள்ளார். **இந்தியாவில் முன்பு கவனம் இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது இதன் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது.**

**ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய இக்பால் சாஹிப் கன்டோரி இன்ஸ்பெக்டர் வக்ஃபே ஜதீத் எழுதுகிறார்:**

ஜட் சர்லா ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு சகோதரர். அவருக்கு வயது 25 ஆகும். ஆனால் அல்லாஹ்வின் அருளால் ஆந்திர மாநிலத்திலேயே பொருள் தியாகம் செய்வதில் முதல் இடத்தில் உள்ளார். 2011 ஆம் ஆண்டு இவர் 66 ஆயிரம் ரூபாய் வாக்குறுதியாக வழங்கியிருந்தார். ஆனால் வியாபாரம் முடங்கியதன் காரணமாக அதிகமாக முயன்றும் கூட அதை அவரால் செலுத்த முடியவில்லை. இதனால் அவர் மிகவும் வெட்கப்பட்டார். வாக்குறுதி எழுதி விட்டு அதை செலுத்த முடியாமல் போனதற்காக மிகவும் வெட்கப்பட்டார். அவருடைய நண்பர்கள் சந்தாவை மன்னிக்கக்கோரி மேலிடத்திற்கு கடிதம் எழுத ஆலோசனை வழங்கினர். ஆனால் இவர் சந்தா கொடுக்கும் விசயத்தில் மிகவும் ஆர்வமுடையவராக இருக்கின்றார். அவர் அவர்களிடத்தில் நான் ஜமாஅத்திற்காகவும் அல்லாஹ்விற்காகவும் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளேன். என்னுடைய வாக்குறுதியை அல்லாஹ் நிச்சயமாக பூர்த்தி செய்வான் என்று கூறினார். பிறகு 2012 ஆம் ஆண்டிற்கான வாக்குறுதியை பெறுவதற்காக சென்ற போது கடந்த வருடத்தை விட தனது சந்தாவை உயர்த்தி 77 ஆயிரம் ரூபாயாக வாக்குறுதி எழுதினார். ஆனால் அப்போதும் கூட அவர் பொருளாதார சிக்கலில் தான் இருந்தார். மே மாதம் சந்தா வசூல் செய்வதற்காக நான் சென்ற போது கடந்த வருட பாக்கியையும், 2012 ஆம் ஆண்டுக்கான வாக்குறுதியையும் செலுத்தியதும் மட்டும் அல்லாமல் 24 ஆயிரம் ரூபாய் அதிகப்படியாகவும் வழங்கினார். இது சந்தாவின் பரக்கத்தாகும் என்றும கலீஃபத்துல் மஸீஹின் துஆவின் விளைவுமாகும் என்றும் இதனால் என்னுடைய பொருளாதார சிக்கல் நீங்கியது; நான் இப்போது இரண்டு வருட சந்தாவையும் மொத்தமாக செலுத்துகின்றேன் என்றார்.

**இந்தியாவைச் சேர்ந்த வக்ஃபே ஜதீத் இன்ஸ்பெக்டர் I.R. அன்ஸார் சாஹிப் எழுதுகிறார்:**

வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கான சுற்றுப்பயணத்தின் போது நான் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள கோயம்புத்தூர் ஜமாஅத்திற்கு சென்றேன். நாஸிம் சாஹிப் வக்ஃபே ஜதீத் என்னுடன் இருந்தார்கள். மதிய உணவிற்கான ஏற்பாடு சகோதரர் சுலைமான் சாஹிப் அவர்களது வீட்டில் செய்யப்பட்டிருந்தது. அவர் ஒரு தூய அஹ்மதியாவார். 2011 ஆம் ஆண்டிற்கான அவரது வக்ஃபே ஜதீத் சந்தா பட்ஜெட் 1 லட்சத்தி 60 ஆயிரம் ரூபாபாக இருந்தது. இந்த தொகையை வருடத்தின் இறுதியில் செலுத்துவதற்காக இவர் மிகவும் சிரமப்பட்டார்.

மிகவும் கஷ்டப்பட்டு அவர் இந்த தொகையை செலுத்தினார். இவ்வருடம் அவர் தன்னுடைய பட்ஜெட்டை மிகவும் மகிழ்ச்சியுடன் 5 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாயாக எழுதினார். இதனால் எனக்கு ஒரு வியக்கத்தக்க பயம் ஏற்பட்டது. 1லட்சத்தி 60 ஆயிரம் ரூபாய் பட்ஜெட்டை இவர் மிகவும் சிரமப்பட்டு செலுத்தியிருக்கிறார். இப்போது அதை விட மூன்று மடங்கு அதிகமான பட்ஜெட்டை இவர் எப்படி பூர்த்தி செய்வார் என்று எண்ணினேன். நாஸிம் சாஹிப் என்னுடன் இருந்ததால் இதை எழுதுவதை தவிர எனக்கு வேறு வழியில்லாமல் போனது. சாப்பிட்டு விட்டு துஆ செய்த பிறகு நாங்கள் அங்கிருந்து சென்று விட்டோம். நாங்கள் ஜமாஅத் தலைவருடன் இன்னொருவரின் வீட்டிற்கு துஆ செய்ய சென்றிருந்தோம். அரை மணி நேரத்திற்குப் பிறகு நான் நாஸிம் சாஹிபுடன் சதர் சாஹிபுடைய காரில் பள்ளிவாசலுக்கு வந்து சேர்ந்தோம். பள்ளிவாசலுக்கு முன்னால் அந்த சகோதரர் நின்று கொண்டிருந்தார். நானும் நாஸிம் சாஹிபும் காரில் அமர்ந்திருந்தோம். சுலைமான் சாஹிப் ஒரு பிளாஸ்டிக் கவரைக் கொடுத்தார். சாப்பாட்டிற்குப் பிறகு கொஞ்சம் இனிப்பும் சாப்பிட வேண்டும் என்று கூறினார். நாஸிம் சாஹிபிற்கு சர்க்கரை நோய் இருப்பதால் அவர் சாப்பிடக் கூடாது. நான் சாப்பிடுகிறேன் என்று கூறினேன். நாஸிம் சாஹிப் அந்த கவரை என்னிடம் கொடுத்த போது சுலைமான் சாஹிப் கூறினார். மவ்லவி சாஹிப் இந்த கவரைப் பார்த்து துஆ செய்து விட்டு அதன் பிறகு கொடுங்கள் என்று கூறினார். மவ்லவி சாஹிப் அந்த கவரை திறந்து பார்த்த போது மிகவும் ஆச்சரியம் அடைந்து சொல்வதரியாது திகைத்து நின்றார்கள். மீண்டும் நான் அவர்களிடம் கேட்ட போது அவர்களால் எதுவும் பேச முடியவில்லை. அதன் பிறகு அந்த கவரை நாஸிம் சாஹிப் என்னிடம் கொடுத்தார்கள். அதை நான் திறந்து பார்த்தேன். அதில் 5 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் இருந்தது. அதை பார்த்து என்னுடைய கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. அல்லாஹ் அவருக்காக இவ்வாறு ஏற்பாடு செய்திருக்கிறான். இதனால் அவர் சந்தாவை முழுமையாக செலுத்தி விட்டார். அவருக்காக துஆவும் வெளிப்பட்டது.

**கனடாவிலுள்ள பரவுன்டா ஜமாஅத் தலைவர் எழுதுகின்றார்:**

ஒரு சகோதரர் USA –விலிருந்து கடனா வந்திருந்தார். கனடாவில் அடைக்கலம் கேட்டு விண்ணபித்திருந்தார். இவருடைய அடைக்கலம் தொடர்பான வழக்கும் மிகவும் சிக்கலாகி விட்டது. இவர் தனது தாயாரை ஜெர்மனி அனுப்புவதற்காக ஐந்தாயிரம் டாலர்களை சேர்த்து வைத்திருந்தார். இவரிடம் சந்தா வாங்குவதற்காக தொடர்பு கொண்ட போது இவர் சேர்த்து வைத்திருந்த 5 ஆயிரம் டாலர்களை வழங்கியது மட்டுமல்லாமல் அதைத் தவிர அவரிடம் இருந்த கொஞ்சம் தொகையையும் தந்து விட்டார். அல்லாஹ் இதற்கு பகரமாக அவர்கள் மீது அருள் செய்தான். அவரது அடைக்கலம் தொடர்பான வழக்கு எவ்வித சிக்கலுமின்றி பாஸ் ஆனது. ஒரு வாரம் கழிந்த பிறகு அவரது தாயாரும் ஜெர்மனி சென்று விட்டார்.

**நார்வேயின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஒரு நாள் ஒரு உள்ளூர் ஜமாஅத்தில் பைத்துன் நுஸ்ரத் பள்ளிவாசல் கட்டுவது தொடர்பாக கவனமூட்டப்பட்டது. அப்போது கடும் பனி பொழிந்து கொண்டிருந்த காலத்தில் அப்துர் ரஹீம் அஹ்மதி சாஹிப் மர்ஹும் மிசன் ஹவுசுக்கு வந்தார்கள். அவர் தன்னிடம் 70 ஆயிரம் குரோன்ஸ் இருப்பதாகவும் அதை அவர் பள்ளிவாசல் கட்டுவதற்காக கொடுக்க விரும்புவதாகவும் கூறினார். இவ்வாறு பலர் அல்லாஹ்வுக்காக எவ்விதமான கவலையுமின்றி தியாகம் செய்கின்றனர். நல்லெண்ணத்துடன் செய்த தியாகங்கள் யாவும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதை அவர்கள் நன்கறிவர். இதற்காக அவர்களுக்கு அல்லாஹ் தஆலா நற்கூலி வழங்குகின்றான்.

நான் எடுத்துக்கூறிய இந்த சம்பவங்கள் முடிவுறாத தியாகங்களின் தொடர்களாகும். அவர்கள் பொருள் தியாகம் செய்வதற்கான வாக்குறுதியை வழங்கிவிட்டு அதை நிறைவேற்றுவதற்காக எல்லா விதத்திலும் முயற்சி செய்கின்றனர்.

இதற்கு பிறகு நான் வழக்கம் போல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாத துவக்கத்தில் வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்தை அறிவிப்பது போல் இவ்வருடமும் வக்ஃபே ஜதீதின் 56 ஆவது வருடத்தை அறிவிக்கின்றேன். அத்துடன் கடந்த வருடத்தின் சில அறிக்கையையும் எடுத்துரைப்பேன். அல்லாஹ்வின் அருளால் 55 ஆவது வருடமாகிய கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் தேதி முடிவடைந்தது. இந்த ஆண்டு ஜமாஅத் 50 லட்சத்தி 10 ஆயிரம் பவுண்ட் தியாகம் செய்தது. கடந்த வருடத்தை ஒப்பிடும் போது இந்த ஆண்டு 3 லட்சத்தி 17 ஆயிரம் பவுண்ட் இது அதிகமாகும். பாகிஸ்தான் தன்னுடைய இடத்தில் நிலைத்திருக்கிறது. உலகத்தின் பிற நாடுகளை வரிசைப்படுத்தி ஒன்று முதல் ஆரம்பித்தால் இந்த வருடம் உங்களுக்கான நற்செய்தி இதில் உள்ளது. அதாவது இம்முறை வக்ஃபே ஜதீதில் **பிரிட்டன் முதல் இடத்தில் உள்ளது.** அமெரிக்கா இரண்டாம் இடத்திலும், ஜெர்மனி மூன்றாம் இடத்திலும், கனடா நான்காம் இடத்திலும், **இந்தியா ஐந்தாவது இடத்திலும்**, ஆஸ்திரேலியா ஆறாம் இடத்திலும், இந்தோனேஷியா ஏழாம் இடத்திலும், பெல்ஜியம் எட்டாம் இடத்திலும், மத்தியக் கிழக்கிலுள்ள ஒரு நாடு ஒன்பதாம் இடத்திலும், சுவிட்சர்லாந்து பத்தாம் இடத்திலும் உள்ளன. கரன்சி அடிப்படையில் கடந்த வருடத்தை ஒப்பிடும் போது வசூலில் மிக அதிக முன்னேற்றம் கண்டுள்ள ஜமாஅத்துகள் மூன்று உள்ளன. அவற்றில் ஆஸ்திரேலியா 42.5 சதவிகிதம் பெற்று முதல் இடத்திலும், இந்தியா 31.5 சதவிகிதம் பெற்று இடண்டாம் இடத்திலும், இந்தோநேஷியா 25.19 சதவிகிதம் பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளது.

**தனி நபர் சந்தா செலுத்துவதில்** விகிதாச்சாரப்படி முன்னணியிலுள்ள ஜமாஅத்துகளில் **அமெரிக்கா முதல் இடத்திலும்,** U.S.A. மொத்த வசூல் அடிப்படையில் இரண்டாவது இடத்தில் இருந்தாலும் பாக்கிஸ்தானுக்குப் பிறகு இடண்டாம் இடத்திலும் தனி நபர் சந்தா கொடுப்பதில் இது முதல் இடத்தில் உள்ளது. இது ஏறக்குறைய ஒரு நபருக்கு 88 பவுண்ட் என்ற விகிதத்தில் உள்ளது. இதன் அடிப்படையில், சுவிட்சர்லாந்து 55 பவுண்டை விட அதிகமாக உள்ளது. பிரிட்டன் 40 பவுண்ட், பெல்ஜியம் 39 பவுண்ட், கனடா ஏறக்குறைய 35 பவுண்ட். இவ்வருடம் புதிதாக சேருபவர்களின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும் என கவனமூட்டப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் ஆப்ரிக்கா ஜமாஅத்துகள் இதில் குறிப்பாக கவனம் செலுத்தியுள்ளன. **வக்ஃபே ஜதீதில் மொத்தம் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தி 13 ஆயிரத்தி 112** ஆகும். கடந்த வருடம் 6 லட்சத்தி 90 ஆயிரம் பேர் பங்கேற்றிருந்தனர். 3 லட்சத்தி 23 ஆயிரம் பேர் புதிதாக பங்கேற்றுள்ளனர். மாசா அல்லாஹ். அசல் விசயம் இதுவாகும். அதாவது பங்கேற்பவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட வேண்டும். அதன் மூலம் ஈமானிலும் நிச்சய உறுதியிலும் ஒவ்வொருவரும் முன்னேற வேண்டும். பொருள் தியாகம் ஈமானின் ஒரு முக்கிய பகுதியாகும். பங்கேற்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியதில் ஆப்பிரிக்க நாடுகளில் நைஜீரியா முதல் இடத்திலும், கானா இரண்டாம் இடத்திலும் பிறகு சிராலியோன், பெனின், நைஜர், ஃபுர்கினோஃபாஸோ, ஐவரிகோஸ்ட் நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. சிறிய நாடுகளில் கேமரூன், மாலி, செனிகால், டோகோ, கினிகுனா ஆகிய நாடுகள் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி உள்ளன. ஆப்ரிக்காவைத் தவிர உலகத்தின் பிற நாடுகளில் பிரிட்டன் மிக அதிகமாக பங்கேற்பவர்களின் எண்ணிக்கையை கூட்டியுள்ளது. இவ்வருடம் முதல் முறையாக கபாபீர் ஜமாஅத்தும் சற்று அசைந்துள்ளது. அவர்களும் இதில் முன்னேறியுள்ளனர்.

ஆப்ரிக்காவில் ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் முதல் மூன்று ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் கானா உள்ளது. அல்லாஹ் இவர்களுக்கு கிடைத்த இந்த பெருமையை தக்க வைத்துக் கொள்பவர்களாக ஆக்குவானாக! இரண்டாவதாக இடத்தில் நைஜீரியா பிறகு மொரீஷியஸ் மூன்றாவது இடத்திலும், ஃபுர்கினோஃபாஸோ நான்காவது இடத்திலும், ஐவரி கோஸ்ட் ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

பாகிஸ்தானின் முதல் மூன்று ஜமாஅத்துகளில் லாஹூர் முதல் இடத்திலும், ரப்வா இரண்டாம் இடத்திலும், கராச்சி மூன்றாம் இடத்திலும் உள்ளது. பால்கானில் மாவட்ட அளவிலான இடங்களில் ராவல்பிண்டி முதலாவது இடத்திலும், அதற்கு அடுத்தபடியாக பைஸலாபாத், சேகுபூரா, குஜ்ரன்வாலா, குஜராத், நாரோவால், ஹைதராபாத், சாங்கட் ஆகியவை முறையே அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

அத்ஃபால்கள் சந்தா செலுத்துவதில் முதல் மூன்று இடத்தில் உள்ள பெரிய ஜமாஅத்துகளில் லாஹூர் முதல் இடத்திலும், கராச்சி இரண்டாவது இடத்திலும், ரப்வா மூன்றாவது இடத்திலும் உள்ளது. அத்ஃபாலில் மாவட்ட அளவிலான பொஷிசனில் முதல் இடத்தில் ராவல்பிண்டியும், இரண்டாவது இடத்தில் இஸ்லாமாபாத், பைஸலாபாத், உமர்கோட் பிற ஊர்களை விட ஏழ்மையில் இருக்கும் மாவட்டமாகும். ஆனால், அல்லாஹ்வின் அருளால் தியாகத்தில் முன்னணியில் உள்ளனர். அடுத்து குஜராத், ஹைதராபாத், உக்காடா, பாவல்பூர், டேரா காஸிஹான் ஆகியவை அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரிட்டனில் முதல் பத்து இடங்களில் வந்த ஜமாஅத் இதுவாகும். ரெயின்ஸ்பார்க் முதலாவது இடத்திலும், பெர்மங்கன் வெஸ்ட் இரண்டாவது இடத்திலும், ஊஸ்டர்பார்க் மூன்றாவது இடத்திலும், பிறகு நியூ மார்டன், வெஸ்ட் ரெய்டன், பெர்மிங்ஹம் சென்ட்ரல், பைத்துல் புதூஹ், ஜலிங்கம், அல்ஸ் ஃபீல்ட், விம்பிள்டன் ஆகிய ஜமாஅத்துகள் முறையே அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

வசூலின் அடிப்படையில் பிரிட்டனின் முதல் ஐந்து ரீஜியன்களில் மிட்லாண்டு முதல் இடத்திலும், சவுத் ரீஜியன், லண்டன், மிடில் செக்ட்ஸ், நார்த் ஈஸ்ட் ஆகியவை முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் முதல் ஐந்து ஜமாஅத்துகளில் லாஸ் ஏஞ்சலஸ், மிட்லேன்ட் அம்பெயர், சிலிகான் வேலி இரண்டாம் இடத்திலும், டெட்ராய்டு, சியட்ரல், சிகாகோ வெஸ்ட் ஆகியவை முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

வசூலின் அடிப்படையில் ஜெர்மனியின் ரீஜியனில் ஹம்பர்க். மாசா அல்லாஹ் ஹம்பர்க் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. இது முதல் இடத்தில் உள்ளது. பிராங்ஃபர்ட், கிராஸ் கிராவ், டாம் ஸ்டட், விஸ்பாதன், மயின் பிராக்கன், ஹீஸன் வெஸ்ட், நொட்ரைன், ஹேஸன் மெட்டே, பாதன்.

வசூலின் அடிப்படையில் ஜெர்மனியில் முதல் பத்து இடங்களை வகிக்கும் ஜமாஅத்துகள் இவையாகும். டியூடர் மார்க், நோயஸ், எனோவர், ஃபேட் பார்க், கென்ஸ் ஹாய்ம், ஹைடல் பார்க், புல்டா, வேன்ஸ்ஹய்ம், வயின் காடன், மோயெஃபிடன்.

தஃப்தர் அத்ஃபாலில் வசூலின் அடிப்படையில் கனடாவில் முதல் ஐந்து இடங்களை வகிக்கும் ஜமாஅத்துகள் இவையாகும். கேல்கரி, பீஸ் வில்வேஜ் சவுத், ஆர்மின்டன், டர்ஹம், சரே ஈஸ்ட்.

இந்தியாவில் வசூலின் அடிப்படையில் முதல் பத்து இடங்களை வகிக்கும் மாநிலங்களில் கேரளா முதலாவது இடத்திலும், தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், ஜம்மு காஷ்மீர், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, ஒரிசா, காதியானையும் இவர்கள் மாநிலத்தில் சேர்த்து விட்டார்கள். பஞ்சாப், உத்திர பிரதேசம், மஹாராஷ்ட்ரா மற்றும் தில்லி.

வசூலின் அடிப்படையில் இந்தியாவின் ஜமாஅத்துகளில் கோயம்புத்தூர் முதல் இடத்திலும், கோழிக்கோடு இரண்டாம் இடத்திலும், கருளாயி, கன்னனூர் டவுன், காதியான், ஹைதராபாத், கொல்கத்தா, பைன்காடி, சென்னை, பெங்களூர், ரிஷி நகர் முறையே அடுத்தடுத்து உள்ளன.

அல்லாஹ் தியாகம் செய்த அனைவரது உயிரிலும் பொருளிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் தருகின்ற அல்லாஹ்வின் அடியார்களுடன் அல்லாஹ் பரிவுடன் நடந்து கொள்கின்றான். அவர்களை நேசிக்கின்றான். இது தொடர்பாக அவன் வல்லாஹு ரவூஃபுன் பில் இபாத் அதாவது அல்லாஹ் தனது அடியார்களுடன் பரிவுடன் நடந்து கொள்கின்றான் என்று கூறுகின்றான். இந்த மக்கள் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய வாழ்க்கையை அல்லாஹ்வின் வழியிலேயே அர்ப்பணித்து விடுகின்றனர். உயிரை அவனது வழியில் அர்ப்பணிப்பதையும் செல்வத்தை அவனது வழியில் செலவு செய்வதையும் அவர்கள் அவனது அருள் என்றும் தமது நற்பாக்கியம் என்றும் கருதுகின்றனர். ஆனால்

எவர்கள் உலக பொருள்கள் மற்றும் சொத்துக்களையும் பெறுவதையே தமது குறிக்கோளாக கொண்டுள்ளார்களோ அவர்கள் மார்க்கத்தை அற்பமாக பார்க்கின்றனர். உண்மையான மூஃமின் மற்றும் உண்மையான முஸ்லிமின் செயல் இவ்வாறு இருக்காது. அல்லாஹ்வின் வழியில் தனது எல்லா ஆற்றலையும் வாழ்நாள் உள்ள வரை அர்ப்பணிப்பதே இஸ்லாமாகும். அதன் மூலம் அவர் தூய வாழ்க்கைக்கு வாரிசாகி விட வேண்டும். நாம் அல்லாஹ்வின் வழியில் எல்லா விதமான தியாகங்களை செய்வதில் எப்போதும் முன்னேறிக் கொண்டிருப்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

இதைத் தவிர நான் ஒரு துஆவிற்காக அறிவிப்பு செய்ய விரும்புகிறேன். லிபியாவில் இன்றைய நாட்களில் அஹ்மதிகளின் சூழ்நிலை மிகவும் மோசமாக உள்ளது. அங்கு அரசாங்கம் என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு பகுதியிலும் சில அமைப்புகளும் சில கோத்திரத்தை சார்ந்தவர்களின் ஆதிக்கமே உள்ளது. நமது அஹ்மதிகளை பிடித்து வைத்துள்ளார்கள். சில இடங்களில் அவர்களை துன்புறுத்துவதாக செய்திகள் வந்துள்ளது. ஆலிம்களும் சில பிரிவுகளும் கூறியதற்கேற்ப அஹ்மதிகளை போலீஸ் சிறை பிடித்துள்ளது. குறிப்பாக லிபியாவைச் சேராத அஹ்மதிகள் அங்கு மிகவும் சிரமத்தில் உள்ளனர். அவர்களின் விடுதலைக்கும் எளிதான நிலை ஏற்படுவதற்கும் இறைவன் விரைவில் ஏற்பாடு செய்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **04.01.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456